## புத்தசாசன நிதியம் - 2021

---

புத்தசாசன நிதியத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு பணிகள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பிலான முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) இன் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தினாலும், அந்த நிறுவனம் தொடர்பில் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் எந்தவொரு கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனம் தொடர்பிலான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் பிரகாரம் குறிப்பிடப்படும் கால எல்லைகளினுள் அந்த நிறுவனங்களின் செயலாற்றல் அறிக்கைகளுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், ஆண்டறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய காலங்களில் இடம்பெறுகின்றமையை சான்றுபடுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமை

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்நதிக்கமைய உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரமாணத்தின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 02 மாதங்களினுள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தயாரிக்கப்படும் அறிக்கை மற்றும் கூற்று பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உரிய | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் அறிக்கைகள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதுடன், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் அறிக்கைகளையும் கூடிய விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | வேண்டியமை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(2) | ஒரு குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட இடைக்கால கட்டுநிதி சம்பந்தப்பட்ட பணி முடிந்தவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 03 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 90,000 ஆன முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு 14 நாட்களுக்கும் மேற்பட்ட காலமொன்று எடுக்கப்பட்டதுடன் முற்பணம் தீர்க்கப்படும் வரை மீதமுள்ள பணத்தை கையில் வைத்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் முற்பணத்தை தீர்ப்பதற்கும், முற்பணத்தை செலுத்தும் சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட நபரிடம் கையெழுத்து பெறுதல் உள்ளிட்ட அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றுவதற்கும், எதிர்காலத்தில் இதுபோன்ற பலவீனங்களை தவிர்ப்பதற்கும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 757 | கணக்காண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022/12/31 ஆந் திகதியில் உள்ளபடியாக பொருள் மெய்மையாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த மெய்மையாய்வினை மேற்கொண்டு அறிக்கைகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | நிதிப் பிரமாணக் கோவையின் 133(ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் | நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது நிதியம் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் கிடைக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவு

**2.2 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 264 இன் பிரகாரம் ஒவ்வொரு கொடுப்பனவும் உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட மொத்த தொகை கிடைத்ததாக வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட, (தேவையான போது உரிய முறையில் முத்திரை பொறிக்கப்பட்ட) பற்றுச்சீட்டில் சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும், தெரிவுக் கணக்காய்வின் போது ரூபா 4,845,140 இற்கு உரிய கொடுப்பனவுகள் தொடர்பில் பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், சில கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுடன் ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிய பற்றுச்சீட்டுகள் / உறுதிச்சீட்டுகள் பரிசோதிக்கப்படாது இணைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது. | ரூபா 4,845,140 இற்கான கொடுப்பனவுகளுக்குரிய உறுதிச்சீட்டுகளுக்கிடையே,<br>• அதிகாரிகளினால் முற்பணத் தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>• மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினங்களை பெற்றுக்கொண்டதாக உறுதிப்படுத்தலொன்று பெற்று சமர்ப்பிக்க முடியும்.<br>• மருத்துவ கொடுப்பனவுகள் தொடர்பாக் பெரும்பாலான பற்றுச்சீட்டுகளை அனுப்பியுள்ளதுடன், தனியானதொரு கோப்பில் கோவைப்படுத்தப் பட்டுள்ளன.<br>• சுத்திகரிப்பு செயற்திட்டத்தின் கீழ் பணச் செலுத்தல்கள் பிரதேசச் செயலாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றம் எடுக்கப்பட்டுள்ளது. பற்றுச்சீட்டுக்கள் பெறப்படாவிடின் கொடுப்பனவை உறுதிப்படுத்தி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க ஆலோசனை வழங்கப்பட்டது.<br>• எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு | ஒவ்வொரு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்காகவும் மொத்த தொகை கிடைத்துள்ளதாக பெறுநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| | உரிய அறிவுரைகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.<br>• செயற்திட்டத்திற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது, முந்தைய மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உரிய பற்றுச்சீட்டுகள் கிடைத்த பின்னர் அதற்கடுத்த மாதத்தின் போது கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய உறுதிச்சீட்டில் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | |

**2.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தின் கொடுப்பனவுகள், நன்கொடைகள் போன்றவற்றை மேற்கொள்ளும் போது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உரிய காலப்பகுதி நிறைவடைந்து சில மாதங்களின் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, ரூபா 482,500 கூட்டுத்தொகைக்கு உரியதாக 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையிலும் தாமதங்கள் ஏற்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.. | செயற்திட்டங்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது முந்தைய மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உரிய பற்றுச்சீட்டுகள் கிடைத்த பின்னர் அதற்கடுத்த மாதத்தின் போது கொடுப்பனவை மேற்கொள்ளப்படுவதால் பற்றுச்சீட்டு கிடைப்பதிலான தாமதங்கள் இடம்பெற்றமையின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலும் தாமதம் ஏற்பட்டது. தற்போது பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை தொடர்புகொண்டு துரிதமாக பற்றுச்சீட்டுக்களை வரவழைப்பதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | உரிய நன்கொடைகள், படிகள் தொடர்பிலான கொடுப்பனவுகளை தாமதமின்றி செலுத்த வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 317,400 மதிப்புள்ள புத்த ஜெயந்தி நாணயங்கள் இருப்பொன்று நிதியத்தில் காணப்பட்டும் அந்த நாணயங்கள் தொடர்பான மெய்மையாய்வொனறு இந்த அறிக்கையின் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டு மெய்மையாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டள்ளது. | ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவை இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்திற்குரிய பௌத்த தரும நூல் இருப்பின் பெறுமதி ரூபா 6,953,882 ஆன போதிலும், அதற்குரியதாக 2016 ஆம் ஆண்டின் பின்னர் மெய்மையாய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | 2022.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக பொருட்கள் மெய்மையாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த மெய்மையாய்வினை மேற்கொண்டு அறிக்கைகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவை இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

**2.4 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளின்படி, மீளாய்வாண்டில் ரூபா 48,446,525 நிதியத்தின் வருமானமாக பெறப்பட்டிருந்தும் அதில் ரூபா 21,766,115 அதாவது 44 சதவீதம் மட்டுமே நிதியின் நோக்கங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. பௌத்த சமயத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கு மிகவும் பொருத்தமான பணிகளுக்குப் பணத்தைப் பயன்படுத்துவதே நிதியத்தின் செயற்பாடாக இருந்தாலும், வருடாந்தம் நிதியத்திற்கு கிடைக்கும் வருமானத்திற்கு ஏற்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புத்தசாசன நிதியத்தினூடாக நடைமுறைப்படுத்தக்கூடிய புதிய செயற்திட்டங்களை இனங்கண்டு, எதிர்வரும் வருடத்திற்கான கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் அந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நிதியத்தின் வருமானம் திறமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் |

## 3. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 3.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தை இல்லாதொழித்து, மேற்படி நிதியத்தின் கீழ் உள்ள | பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தை நிறைவு செய்வதற்கும் அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் 2021 | புத்தசாசனத்தின் முன்னேறறத்திற்காக செய்யப்பட வேண்டிய பணிகள் செயல் |

| | | |
|---|---|---|
| கணக்குகளின் மீதிகளை புத்தசாசன நிதியக் கணக்கிற்கு மாற்றுவதற்கு, அந்த நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்ந்தும் புத்தசாசன நிதியத்தின் மூலம் பின் தொடரப்படுதல் மற்றும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் மற்றும் அந்த நிதியத்தைப் பயன்படுத்தி மேலும் புத்தசாசனத்தின் முன்னேற்றத்திற்காக செய்யப்பட வேண்டிய பணிகளை முறையாக முன்னெடுப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானமொன்று எடுக்கப்பட்டபோதிலும் அது தொடர்பாக 2021 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்கு மற்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் செயற்படவில்லை. | ஆம் ஆண்டு முதல் பின்வரும் 02 புதிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாக அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>• 90 வயதுக்கு மேற்பட்ட துறவிகளின் பராமரிப்புக்காக மாதாந்த உதவித்தொகையொன்று செலுத்துதல்.<br><br>• புதிய நிறுவனங்கள், பிரிவேன மற்றும் அற நெறிப் பாடசாலைகளுக்கு நூலக வசதிகளை வழங்குதல் | நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். |

**3.2 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கான செயன்முன்னேற்ற அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், நிதியத்தின் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கணக்காய்வில் பரிசோதிக்க முடியாதிருந்தது. | 2021 ஆம் ஆண்டுக்கான செயலாற்றல் அறிக்கையொன்று 85 ஆவது கட்டுப்பாட்டுச் சபை அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பது. |